01.11.2025. S.C.No.14 of 2020 P.W.9 - இருதயராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

புகாரில் புகாரை யார் சொல்லி யார் எழுதியது என்பது பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் என் நணபர்கள் மற்றும் உதயசூரியன் உறவினர்களுடன் காவல் நிலையம் வந்து புகார் மனுவை கொடுக்கிறேன் என்று உள்ளது. அந்த நபர்களில் யார் புகாரை எழுதியது என்று என்னுடைய புலன் விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை.

அந்த புகாரில் உள்ள கையெழுத்தும் மற்றும் அதற்கு கீழே உள்ள மேற்குறிப்பும் ஒரே நபரின் கையெழுத்து என்று கையெழுத்து நிபுணரிடமிருந்து அறிக்கை வந்துள்ளது என்றால் நான் ஏற்கனவே சாட்சியம் சொன்னபோது நான் கண்ணாடி அணியவில்லை அதனால் என்னால் சரியாக சொல்ல முடியவில்லை. தற்போது கண்ணாடி அணிந்துள்ளேன், புகாரில் உள்ள கையெழுத்து மற்றும் அதற்கு கீழே உள்ள மேற்குறிப்பு என்னுடைய கையெழுத்துதான்.

புகாரை அ.சா.1 சுமன் எழுதவில்லை என்றால் அவர் எழுதவில்லை. அந்த புகாரில் நான்தான் அதை கைப்பட எழுதியதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண் 4-ல் புகார் எழுத்துப்பூர்வமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

சம்பவம் மாலை 05.00 மணிக்கு நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இரவு 08.00 மணிக்குத்தான் புகார் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூன்று மணி நேரம் கால தாமதம் ஏற்பட்டது ஏன் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கால தாமதம் ஏற்படவில்லை. ஆனால் புகாரில் கால தாமதம் குறித்து சொல்லவில்லை.

முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் இரண்டரை கி.மீ தூரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தால் 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் அப்படி சொல்ல முடியாது 20 நிமிடம் கூட ஆகலாம். முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண் 8-ல் புகார் கால தாமதம் இல்லை என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு இரவு 08.30 மணிக்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சியிடம் முதல் தகவல் அறிக்கையை காண்பித்து மறுநாள் 9-ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு நீதித்துறை நடுவரால் பெறப்பட்டதாக மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து சரிதான் என்று சாட்சியம் அளிக்கிறார். 18 மணி நேரம் கால தாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் நான் நீதிமன்ற காவலரிடம் கொடுத்துவிட்டேன், அன்று இரவு நேரமாகிவிட்டதால் மறுநாள்

நீதிமன்ற காவலர் நீதித்துறை நடுவரிடம் கொடுத்துள்ளார். காவல் நிலையத்தில் வைத்து புகார் மற்றும் இதர ஆவணங்களை நாங்களே தயார் செய்துக்கொண்டதால்தான் கால தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் வேலூர் அரசு மருத்துவமனையில் சூர்யாவை மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு மாலை 07.10 மணி அளவில் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள் என்பதை தந்தை மூலம் தகவல் தெரிந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் அடுக்கம்பாறை அரசு மருத்துவனை சென்று விபத்து பதிவேட்டை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விபத்து பதிவேட்டை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அடுக்கம்பாறை மருத்துவமனையில் போலீஸ் பூத் உள்ளது என்றால் சரிதான். அடுக்கம்பாறை மருத்துவமனையில் உள்ள போலீஸ் பூத்திலிருந்து தகவல் வந்ததாக எந்த குறிப்பும் பொதுநாட்குறிப்பில் இல்லை.

அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு யார் இறந்து போனவரை கொண்டு சென்றார்கள் என்று என் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அவரின் அப்பா உடன் சென்றிருக்கிறார். இறந்தவரின் அப்பா இந்த வழக்கில் சாட்சியமாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். குடியாத்தத்திலிருந்து அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு யார் காயம்பட்டவரை அழைத்து சென்றார்கள், யார்யார் போனார்கள் என்ற விவரம் வழக்குக்கோப்பில் இல்லை என்றால் முதல் தகவல்

அறிக்கையின்படி அவரின் அப்பா மட்டும்தான் உடன் சென்றதாக நாங்கள் பதிவு செய்துள்ளோம், மற்றபடி யார் உடன் சென்றார்கள் என்று விசாரிக்கவில்லை. மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தபோது அவர் ஏற்கனவே இறந்தவிட்டார் என்று தெரிவித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் பரிசோதனை செய்து இறந்துவிட்டார் என்று சொன்ன மருத்துவர்தான் இறந்துபோனவரை உடற்கூராய்வு செய்த மருத்துவர். உடற்கூராய்வு செய்த மருத்துவர்தான் இறந்துபோனவரை பரிசோதனை செய்து இறந்துவிட்டதாக சொன்னதாக தன்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறப்பு பற்றி சொன்னவரும் அவர்தான் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

புகாரில் முதன் முதலில் இறந்துபோனவரை குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதல் உதவி சிகிச்சை அளித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குடியாத்தம் அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேட்டை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குடியாத்தம் அரசு மருவத்துவமனையில் யார் முதல் உதவி சிகிச்சை அளித்தாரோ அவரையும் நான் சாட்சியமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். குடியாத்தம் அரசு மருவத்துவமனையின் விபத்து பதிவேட்டை பார்த்தால்தான் யார் உண்மையில் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள் என்ற விவரமே தெரியும் என்றும், நான் அது குறித்து சரியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1–ம் அவரின் மற்ற நண்பர்கள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அவர்கள் யாரும் மருத்துவமனையில் காயம்பட்ட நபரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. புகாரின் 5 வது வரியில் சம்பவ நேரம் கையால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 108 ஆம்புலன்ஸ்க்கு யாரின் கைப்பேசி எண்ணிலிருந்து தொடர்பு கொண்டு வரவழைத்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் புகாரில் இரண்டாவது பக்கம் கடைசி நான்காவது வரியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைப்பேசி எண் குறிப்பிடவில்லை. தேவி என்ற நபரோ அல்லது அவரின் வீட்டின் அருகில் இருந்த நபரோ 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டு அவ்வாறு இல்லை.

அ.சா.1 சுமன், அ.சா.3 மகேந்திரன், அ.சா.4 அசோக்குமார், அதியமான் ஆகியவர்கள் இறந்தவரின் நண்பர்கள் என்றால் நண்பர்கள் என்று சொல்ல முடியாது. சுமன் மற்றும் மகேந்திரன் இருவரும்தான் நண்பர்கள். மற்றவர்கள் சம்பவ இடத்தில் இருந்தவர்கள். அசோக்குமார், அதியமான் ஆகியவர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

மாதிரி வரைபடத்தில் தென் கிழக்கு செல்வராஜ், பாலகுருவய்யா ஆகியவர்கள் வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றும் அவர்களை இந்த வழக்கில் சாட்சியமாக விசாரிக்கவில்லை என்றால் ஆம் சாட்சியமாக விசாரிக்கவில்லை. நான் விசாரிக்க சென்றபோது அவர்கள் வேலைக்கு சென்றுவிட்டார்கள். செல்வராஜ் என்பவர் மளிகை கடை வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

அப்படி என்றால் அவர் வெளியில் வேலைக்கு சென்றுவிட்டார் என்று சொல்வது பொய் என்றால், சரியல்ல அவர் வேறு வேலையாக சென்றிருந்தார். சாட்சி முரளி மற்றும் அசோக்குமார் சம்பவ இடத்திற்கு எந்த பதிவு எண் கொண்ட வண்டியில் வந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் அவர்கள் சம்பவ இடத்திலேயே இருந்தவர்கள். அவர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்வது பொய் என்றும் அவ்வாறு அவர்கள் கு.வி.மு.ச 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வரைபடத்தில் சம்பவ இடம் தெரு என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றும் அது எந்த மாதிரியான சாலை என்று குறிப்பிடவில்லை என்றால் அது மண்தெருதான். தார் சாலை என்று சொன்னால் அது பொய். பார்வை மகசரில் 9 வது வரியில் தார் ரோடு ஓரமாக இரத்தம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. காரணம் அது தார் ரோடு போடுவதற்காக கலவை தயார் செய்து வைத்திருந்த இடம். தார் ரோடு போடுவதற்காக தயார் செய்து வைத்திருந்த இடம் என்று மகசர் சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தெரு எத்தனை அடி, அகலம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரில் டாஸ்மாக் கடை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டாஸ்மாக் கடை வேறு இடத்தில் உள்ளது. சம்பவம் நடந்தது வேறு இடம். டாஸ்மாக் இடத்திற்கு சென்று வரைபடம் வரையவில்லை என்றால் சரிதான்.

புகாரில் உதயசூரியனின் TVS Super Excel வாகனத்தின் பதிவு எண் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் நிறம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் இருசக்கர வாகனம் TVS Super Excel வாகனத்தின் முன் பகுதியில் N.Saravanan என்றுதான் Number plat–ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சரவணன் யார் என்று நான் விசாரணை செய்யவில்லை என்றால சரிதான். அந்த வண்டி யார் பெயரில் உள்ளது என்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆவணம் சேகரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

புகாரில் மணி என்பவரின் வண்டியின் பதிவு எண், நிறம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரில் ஸ்ரீகாந்த் ஒயின்ஷாப்க்கு வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் உள்ளது. புகாரிலும் அ.சா.1–ன் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்திலும் தாக்கப்பட்ட ஆயுதம் குறித்த விவரங்கள் குறித்து சொல்லப்படவில்லை என்றால் வெட்டுக்கத்தி என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அசா.1 கொடுத்த புகாரில் மற்றும் வாக்குமூலத்தில் வழக்கில் சம்பந்தப்பட்ட வெட்டுக்கத்தியின் விவரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

சம்பவ இடத்திலிருந்து வெட்டுக்கத்தியை வைக்கப்பற்றவில்லை என்றால் ஆமாம் எதிரியின் இருசக்கர வாகனத்திலிருந்து கைப்பற்றினேன். வெட்டுக்கத்தியை கைப்பற்றிய பின்னர் ஆயுதங்களை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளிடம் காண்பித்து அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.2 மற்றும் அ.த.சா.ஆ.16–ல் முட்செடிகள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், புதர்கள் நிறைந்த காலி மனை என்று குறிப்பிட்டுள்ளேன். முட்செடி என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் வழக்கமாக புதர் என்றுதான் சொல்வோம். சாட்சி மகேந்திரன் மற்றும் ஸ்ரீகாந்த் எந்த பதிவு எண் கொண்ட வாகனத்தில் சம்பவ இடம் வந்தார்கள் என்று அ.சா.1 மற்றம் 3 கொடுத்த வாக்குமூலங்களிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாட்சி தேவியின் வாக்குமூலத்தில் இறந்துபோன சூர்யா என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவரின் வாக்குமூலத்தில் சூர்யா இறந்துபோன செய்தி யார் மூலம் தெரிய வந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 தேவியை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் தேவியின் வீட்டின் அருகில் வைத்து விசாரித்தேன். அவரை அவரின் வீட்டின் அருகில் வைத்து விசாரித்தபோது வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் ஆமாம்.

அ.சா.2 ன் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்ட வாக்குமூலம் என்றால் சம்பவ இடத்திற்கு லேப்டாப்பை எடுத்துச்சென்று தட்டச்சு செய்து பதிவு செய்தேன். லேப்டாப்பில் சம்பவ இடத்தில் பதிவு செய்ததாகவும், யார் பதிவு செய்தார்கள் என்றும் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.2–ன் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் பதற்றமாக இருந்ததாகவும், பாதுகாப்பு கருதி போலீசாருக்கு தகவல் கொடுக்கவில்லை என்று சொன்னதாகவோ

இல்லை என்றால் அவ்வாறு அவர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. அதேபோன்று 08.01.2019 அன்று விடுமுறை எடுத்து வீட்டில் இருந்ததாக அவர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் வீட்டில் இருந்தார் அதனால்தான் அவரை விசாரித்தேன். அ.சா.2 தன்னுடைய வாக்குமூலத்தில் சம்பவத்தன்று தன் மகன் ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட வீட்டை சுத்தம் செய்துக்கொண்டிருந்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

அ.சா.3 மகேந்திரன் தன்னுடைய வாக்குமூலத்தில் 08.01.2019 அன்று சம்பவ இடத்தில் ஸ்ரீதேவியை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 மகேந்திரன் வாக்குமூலத்தில் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில்தான் ஒயின்ஷாப் சென்றதாகவும், அதே வாகனத்தில்தான் எதிரிகளை துரத்தி சென்றதாகவும் சொல்லவில்லை என்றால் டிஸ்கவர் வண்டி என்று சொல்லியுள்ளார். பஜாஜ் டிஸ்கவர் பற்றி சொல்லவில்லை. டிஸ்கவர் வண்டி பஜாஜ் நிறுவனத்தை சேர்ந்ததுதான். அதன் பதிவு எண்ணை அவர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 மகேந்திரனை அடித்ததாக சொன்னதற்கு அவர் தனியாக புகார் கொடுத்ததாக குறிப்பிடவில்லை. அவரின் வாக்குமூலத்தில் சம்பவம் எந்த நேரத்தில் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவரின் வாக்குமூலத்தில் எந்த தேதி, எந்த இடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று அவரின் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் 08.01.2019 அன்று விசாரித்ததாக குறிப்பிட்டுள்ளேன். நேரம் மற்றும் இடம் குறிப்பிடவில்லை.

அ.சா.4 அசோக்குமாரின் போலீஸ் வாக்குமூலத்தில் சான்று பொருட்கள் சீலிடப்பட்ட பாலித்தீன் கவரில் அல்லது டப்பாவில் கைப்பற்றியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. படிவம் 91–ல் பாலித்தீன் கவரில் கைப்பற்றினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. அ.சா.4 அசோகுமார் தன் வாக்குமூலத்தில் 08.01.2019 அன்று இரவு என்ன காரணத்திற்காக சக்தி நகர் சென்றார் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் அவர் அந்த பகுதியை சேர்ந்தவர்தான். சொந்த வேலை காரணமாக வந்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.4 ன் வாக்குமூலத்தில் அவரின் குடியிருப்பு ஆர்.எஸ் நகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆர்.எஸ். நகர் என்பது அது மட்டும் அல்ல திருவள்ளுவர் சிலையிலிருந்து நீதிமன்றம் வரை ஆர்.எஸ் நகர்தான். ஆர்.எஸ் நகர் வேறு சக்தி நகர்வேறு என்றால் சரிதான். பழைய ஆட்கள் ராசி நகர் என்று சொல்வார்கள். புதியதாக வந்தவர்கள் சக்தி நகர் என்று சொல்வார்கள்.

அ.த.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசரில் 08.01.2019 என்பதில் மாதம் கையால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் தயார் செய்த நேரம் 22.15 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் பின்பக்கத்தில் நான் கையொப்பம் செய்துள்ள இடத்தில் தேதி 9 என்பது 8 ஆக திருத்தம் செய்து கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் எந்த தேதியில் அது தயார் செய்யப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றம், அந்த ஆவணம் என்னால் காவல்

நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.4 அசோக்குமாரை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் அவரின் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் ஆமாம். அ.சா.5 அதியமானின் வாக்குமூலத்தில் 5வது வரியில் அவரும் துரைசாமி மகன் அதியமானும் சொந்த வேலை காரணமாக சென்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அது சாட்சி ராஜேஷ்–ன் வாக்குமூலம் அப்படியே cut copy paste செய்யப்பட்டுள்ளது என்றால் மாற்றி எதுவும் சொல்லவில்லை. அதியமானின் வாக்குமூலத்தில் நானும் அதியமானும் என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான்.

செதுக்கரை மலையடிவாரம் என்பது சுமார் 7 கி.மீ சுற்றளவு கொண்டது என்றால் இருக்கலாம். அ.சா.5 அதியமானின் வாக்குமூலத்தில் எந்த காரணத்திற்காக செதுக்கரை மலையடிவாரம் வந்தார்கள் என்று சொல்லியுள்ளார்களா என்றால் சொந்த வேலை காரணமாக போனதாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். செதுக்கரை மலையடிவாரத்தில் எந்த பகுதியில் எந்த திசையில் வந்தார்கள் என்று அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை.அ.சா.5–ன் வாக்குமூலத்தில் எதிரிகளும் போலீசாரும் ஜீவா நகரில் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசர் 10.01.2019 அன்று 08.30 மணிக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளதை ஓயிட்னரால் நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சி ஆவணத்தை பார்த்து சரியல்ல என்கிறார்.

வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.6 ஆவணத்தில் முழுக்கை என்ற வார்த்தை இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.5 ஒப்புதல் வாக்குமூலத்தில் இரத்தக்கறை படிந்த வெட்டுக்கத்தி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

(உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.)

(உணவு இடைவேளை முடிந்து மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி)

வழக்குச்சொத்து கத்தி இருசக்கர வாகனம் ஸ்கூட்டி ஜஸ்ட்–ன் டிக்கியிலிருந்து எடுத்து கொடுத்ததாக சொல்வது தவறு என்றும், காரணம் கத்தியின் நீளம் அதிகம் என்றும், வழக்கிற்காக மேற்கண்ட வாகனத்தின் டிக்கியிலிருந்து எடுத்துகொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட சான்று பொருளானது வெளியில் எந்த கடையில் வேண்டுமானாலும் கிடைக்கும் என்றால் கிடைக்கலாம்.

அ.சா.6 தாமோதரனின் வாக்குமூலத்தில் சாட்சி எங்கு வைத்து எந்த தேதியில் விசாரிக்கப்பட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதே வாக்குமூலத்தில் அவருக்கு சம்பவம் கஸ்டமர் வந்து சொல்லித்தான் தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அவரின் வாக்குமூலத்தில் டாஸ்மாக் கடையில் தகராறு நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

எல்லா கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலங்களும் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். L.W.2 முதல் L.W.16 வரை எந்த எந்த தேதிகளில் எந்த எந்த இடத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் தேதி குறிப்பிடவில்லை. அ.சா.1 சுமனின் மறுவாக்குமூலத்திலும் விசாரித்த தேதி குறிப்பிடவில்லை என்றால் தேதி குறிப்பிடவில்லை. சாட்சி சுமனின் வாக்குமூலம் 10.01.2019 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து 10.01.2019 அன்று நீதித்துறை நடுவர் சுருக்கொப்பம் செய்துள்ளார் என்கிறார். 8 அல்லது 9ம் தேதிகளில் பதிவு செய்திருந்தால் அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்திருப்பேன் என்றும், அதை காவல் நிலையத்தில் நானாக தயார் செய்ததால் கால தாமதமாக அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

L.W.2 முதல் L.W.16 வரை உள்ளவர்களின் வாக்குமூலங்களை இறுதி அறிக்கை தாக்கல் செய்தபோது தான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. படிவம் 91 மூன்று படிவங்களும் நீதிமன்றத்திற்கு 13.03.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சான்று பொருட்கள் படிவம் 91 உடன் தான் அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரிதான். இரண்டாவது படிவம் 91 C.P.No.112/2019-ன் பின்புறம் குற்றவியல் நடுவரால் வழக்கு சொத்துடன் தாக்கல் செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் படிவம் 91-ஐ நீதித்துறை நடுவரிடம் வழக்கு சொத்துடன் ஆஜர்படுத்தினேன். நீதிமன்ற பணி நாட்களில் ஆஜர் செய்ய வேண்டும்

என்று படிவம் 91–ஐ நீதித்துறை நடுவர் திருப்பிவிட்டார். மேற்குறிப்பில் தேதி 02.02.2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் எழுதவில்லை. நீதிமன்றத்தால் எழுதப்பட்டுள்ளது. வழக்கிற்காக வழக்கு சொத்துக்களை நான் தயார் செய்ததால்தான் நீதிமன்றத்திற்கு கால தாமதமாக அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஸ்கூட்டி ஜஸ்ட் யார் பெயரில் உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்திலிருந்து நந்தன் என்பவர் ஸ்கூட்டி ஜஸ்ட் வாகனத்தை வாங்கிக்கொண்டு போனார் என்றால் அது எனக்கு தெரியாது. அ.சா.7 மற்றும் அ.சா.8 இறந்து போனவரின் உடலில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். உடல் உள்ளுறுப்புகள்தான் இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்தவரின் இரத்த மாதிரி சேகரித்த பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

அ.சா.8 அசோக்குமாரின் வாக்குமூலத்தில் Item 3, 4 இரண்டுமே Rusty bill–hook என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.13 ஆவணத்தில் ஒரு Rusty bill–hook தான் உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.14 ஆவணத்தில் உள்ள 5 item–களில் யாருடைய இரத்தக்கறை என்ன வகையான இரத்த மாதிரி என்று கண்டறிய முடியவில்லை என்று அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். படிவம் 91–ல் இரண்டாவது படிவத்தில் நேரம் 08.30 என்பது கையால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மூன்றாவது படிவம் 91 லும் நேரம் கையால் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கைப்பற்றப்பட்ட சொத்து விவரத்தில் ஒயிட்னரால் அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். Inquest report–ல் மூன்றாவது சாட்சியாக காண்பித்துள்ள அதியமான் என்பவர்தான் மகசர் சாட்சியாகவும் காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அவரின் வாக்குமூலத்தில் பிரேத விசாரணை குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

1ம் எதிரியை கைது செய்த கைது குறிப்பாணையில் கைது பற்றி அவரின் தாய் கோமதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் அவரின் கையொப்பம் அதில் இல்லை என்றால் SMS மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. SMS மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை அதில் போன் நம்பர் குறிப்பிட்டுள்ளேன். அந்த செல் போன் நம்பர் 1ம் எதிரியின் தாயார் செல் போன் எண் அல்ல என்றால் சரியல்ல.

1ம் எதிரியை சட்ட விரோதமாக கைது செய்த பின்னர் இந்த வழக்கில், புகார் முதல் தகவல் அறிக்கை உட்பட வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. அதனால்தான் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை கால தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார் நான் எழுதினேன் என்றும், முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததும் நான்தான் என்றும், புலன் விசாரணை அதிகாரியும் நான்தான் என்றும், அவ்வாறு மூன்று நிகழ்வுகளையும் ஒரே காவல்

அதிகாரி செய்ய முடியாது என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் யாரும் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் 1ம் எதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அவரிடமிருந்து எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு 2ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

2ம் எதிரியின் கைது குறிப்பாணையில் கைது சம்பந்தமாக யாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது தகவல் பெற்றவரின் கையொப்பம் அதில் இல்லை என்றால் அவரின் மனைவிக்கு SMS மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த தகவலை அவர்கள் பெற்றார்கள் என்பதற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அ.த.சா.ஆ.7–ல் மகசர் தயார் செய்த தேதி மற்றும் நேரம் காலை 09.45 என்று எழுதி 08.45 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதே மகசரில் Column 6–ல் மேரூன் கலர் என்று எழுதி திருத்தம் செய்யப்பட்டு கத்தரிப்பூ கலர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. அது சரியாக வரவில்லை என்பதால் திருத்தம் செய்து கத்தரிப்பூ கலர் என்று எழுதப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறு என்றும் தமிழில்

எழுதப்பட்ட வாசகம்தான் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதே மகசரில் முழுக்கை சட்டை என்று எழுதி அது அடித்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆம் திருத்தப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் 2ம் எதிரியிடம் எந்தவிதமான வழக்கு சொத்தும் கைப்பற்றவில்லை என்றும் அவைகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவைகள் என்றால் சரில்ல. நான் சொல்வது போல் 2ம் எதிரியை சொன்ன தேதி மற்றும் நேரத்தில் கைது செய்யவில்லை என்றும் அவரிடமிருந்து எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றும், எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரியை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் பார்க்கவில்லை என்றும் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்கள் பொய் சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை விசாரணை செய்யாமல் அனைத்து ஆவணங்களையும் வழக்கிற்கு ஏற்றவாறு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

அ.சா.1 காவல் நிலையத்திற்கு வந்து எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் நானாக புகாரை தயார் செய்து 2ம் எதிரிக்கு எதிராக தவறான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் 2ம் எதிரியின் மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சரியாக புலன் விசாரணை செய்திருந்தால் உண்மையான குற்றவாளி யார் என்று தெரிந்திருக்கும் என்றும் நான் சரிவர வழக்கை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.01 15:32:37 +0530